*மே 22, 2015*

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

*இனிமையான குழந்தாய்: அமரநாத் தந்தை (அழிவில்லாத இறைவன் )கூறுகின்றார்: நீங்கள் அனைவரும் பார்வதிகள். தொடந்து என்னை மட்டுமே நினைவு செய்யுங்கள். நீங்கள் அழிவில்லாத இடத்திற்கு செல்வதுடன் உங்கள் பாவங்கள் கரைந்துவிடும்.*

இனிமையான பாபா, நாள் பொழுதில் நான் அழிவற்ற ஆதியான ஆத்மா ஆவேன் என்ற விழிப்புணர்வை நான் மீண்டும் உறுதி செய்திக் கொள்கின்றேன். நான் அழிவற்ற உண்மையான கதையை மற்றும் காலத்தின் வழியாக என்னுடைய பயணத்தையும் நினைவு செய்கின்றேன். நான் சின்னஞ்சிறு அழிவற்ற ஆத்மா. மேலும் அத்மாவிலுள்ள என்னுடைய அழிவற்ற பாகம் ஆதியாக தொடர்கிறது. இந்த விழிப்புணர்வில் நான் மரணத்திற்கு அப்பாற்பட்டு இருக்கின்றேன்.

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

*பாபா ஆத்மாவிற்கு: தேக உணர்வுள்ள புத்தியானது தூய்மையற்ற புத்தியாகும் என்று சொல்லப்படுகின்றது. ஆத்ம உணர்வுள்ள புத்தியானது பூவை போன்றதாகும் என்று சொல்லப்படுகின்றது. நீங்கள் இப்போது மலர்களாக ஆகிக்கொண்டு உள்ளீர்கள். தேக உணர்வில் இருப்பதனால் நீங்கள் மூட்களாக இருக்கின்றீர்கள். குழந்தைகளாகிய உங்களுக்கு பழைய உலகில் விருப்பமின்மை இருக்க வேண்டும். உங்களுக்கு எல்லையற்ற புத்தியும் எல்லையற்ற விருப்பமின்மையும் உள்ளது. நமக்கு இந்த விலைமாதர் இல்லத்தில் மிகப்பெரிய விருப்பமின்மை உள்ளது. சிவஆலயத்திற்கு செல்வதற்கு நாம் மலர்களாக மாறிக்கொண்டு இருக்கின்றோம்.*

நான் பழைய உலகின் மீது எல்லையற்ற விருப்பமின்மை கொண்டுள்ளேன். என்னுடைய புத்தியில் சிவாலயத்தை வைத்துள்ளேன்.

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

*பாபா ஆத்மாவிற்கு: பார்க்கக்கூடிய எதுவுமே இப்போது இருக்கக்போவதில்லை; அனைத்தும் அழியப்போகின்றன. ஆதலால், நீங்கள் வருகின்ற சத்யுகத்தின் கட்சிகள் மற்றும் கட்சியமைப்பை உருவாக வேண்டும். பழைய உலகம் தீ மூட்டப்பட உள்ளது. உங்களிடம் இதனுடைய வரை படமும் வரவிருக்கும் புதிய உலகின் வரைபடமும் உள்ளது.*

என்னுடைய மூன்றாவது கண் புதிய உலகை தாங்கியுள்ளது. நான் பார்கின்றேன் ஆனால் பழைய உலகை பார்க்கவில்லை. சத்யுகத்தின் கட்சிகள் மற்றும் கட்சியமைப்பை மட்டுமே என்னுடைய திருஷ்டியில் உள்ளது.

**ஓர் அலையை உருவாக்குதல்**

**நான் மாலை *7:00* மணி முதல் *7:30* மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.**